DINA THANTHI

15 JULY 2022

PAGE 10

# 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீடிப்பு

புதுச்சேரி, ஜூலை.15-

புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தேசிய தேர்வு முகமை நடத்தும் மத்திய பல்கலைக்கழக முதுகலை மாணவர் சேர்க்கைக்கான கியூட் தேர்வுக்கு விண்ணப்பிப்பது (*https://cuet.nta.nic.in*) வருகிற 18-ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள படிப்புகள், அதற்கான தகுதிகள் *www.pondiuni.edu.in/admissions-2022-23/* என்ற இணையதளத்தில் உள்ளது.

மாணவர்கள் அவ்வப்போது தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தின் தற்போதைய நிலைகள் குறித்து தெரிந்து கொள்ளலாம். முதுகலை பட்டப்படிப்புக்கு 18-ந்தேதி மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணத்தை 19-ந்தேதி நள்ளிரவு 11.50 மணிவரை செலுத்தலாம். தவறுகளை 20-ந்தேதி முதல் 22-ந்தேதி இரவு 11.50 மணி வரை திருத்தலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

15 JULY 2022

PAGE 14

கியூட் நுழைவு தேர்வுக்கு

# விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

புதுச்சேரி, ஜூலை 15: கியூட்- பிஜி நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி ஜூலை 18 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மத்திய பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கான (கியூட் -பிஜி) விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதியை ஜூலை 18 வரை தேசிய தேர்வு முகமை நீட்டித்துள்ளது. புதுவை பல்கலைக்கழகம் வழங்கும் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளில் சேர விரும்பும் ஆர்வமுள்ள மாணவர்கள் கியூட் - பிஜி நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் கியூட் - பிஜி தேர்வுக்கு *https://cuet.nta.nic.in/* என்ற இணையவழியில் ஜூலை 18ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளம் *(www.pondiuni.edu.in/admissions-2022-23/)* மற்றும் தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தை *(https://cuet.nta.nic.in/)* மற்றும் *(https://nta.ac.in/.)* விண்ணப்பதாரர்கள் தவறாமல் பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் ஜூலை 10ம் தேதி மாலை 5 மணி வரை அறிவிக்கப்பட்டிருந்தது 18ம் தேதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப கட்டணத்தை செலுத்த கடைசி தேதி வரும் ஜூலை 19ம் தேதி இரவு 11.50 மணி வரையாகும். இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தில் ஜூலை 20ம் தேதி முதல் 22ம் தேதி இரவு 11.50 மணி வரை திருத்தம் செய்யலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAKARAN

15 JULY 2022

PAGE 5


# PONDICHERRY UNIVERSITY

**Kalapet,**
**Puducherry-605 014**

## EXAMINATION WING
## SUPPLY OF EXAM STATIONERY ITEMS

Sealed Tenders are invited from Reputed Printers/Firms for supply of Exam Stationery items for 2022. For detailed Tender Notification refer to the Pondicherry University website www.pondiuni.edu.in

Last date of receipt of Tender is 08-08-2022 at 03:00 p.m.

**REGISTRAR (i/c)**

DINAMALAR

15 JULY 2022

PAGE 2

# 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 15–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்புகளில் சேர்வதற்கான 'கியூட்' தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அவகாசம் நான்காவது முறையாக, வரும் 18ம் தேதி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் உள்ள முதுநிலை படிப்புகள், டிப்ளமோ படிப்புகளுக்கான இடங்கள், தேசிய தேர்வு முகமை நடத்தும் 'கியூட்' தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது.

மாணவர்கள் https://cuet.nta.in என்ற இணைய தளத்தில், ஜூன் 18ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என முதற்கட்டமா'க அறிவிக்கப்பட்டது.

பிறகு விண்ணப்பிக்க காலக்கெடுவை ஜூலை 4ம் தேதி மற்றும் ஜூலை 10ம் தேதி வரை என மேலும் இருமுறை நீட்டித்து தேசிய தேர்வு முகமை உத்தரவிட்டது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாணவர்கள் விண்ணப்பித்தனர்.

இந்நிலையில் கியூட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு, வரும் 18ம் தேதி மாலை 5.00 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்ப கட்டணத்தை 19ம் தேதி இரவு 11.50 மணி வரை செலுத்தலாம். விண்ணப்பத்தில் திருத்தங்களை 20ம் தேதி முதல் 22ம் தேதி வரை இரவு 11.50 மணி வரை செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் குறிப்பேட்டினை www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் டவுண்லோடு செய்து கொள்ளலாம்.

இத்தகவலை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் தெரிவித்துள்ளார்.